சுருக்கம்

நெடுஞ்சாலை (ம) சிறுதுறைமுகங்கள் துறை— நெடுஞ்சாலைத் துறையின் தொழில் நுட்பக் குழுக்கள்— முதன்மை இயக்குநருக்கு சில பொறுப்புகள் நிர்ணயம் செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

நெடுஞ்சாலை (ம) சிறு துறைமுகங்கள் (எச்.என்.1) துறை

அரசாணை (நிலை) எண்.1

நாள்: 7.01.2011
மார்கழி 23, திருவள்ளுவராண்டு 2041

படிக்கப்பட்டது.

1. அரசாணை (நிலை) எண்.359, நெடுஞ்சாலைத் (எச்.என்.1) துறை, நாள் 12.08.1997.
2. அரசாணை (நிலை) எண்.21, நெடுஞ்சாலைத் (எச்.என்1) துறை, நாள் 25.01.1999.
3. அரசாணை (நிலை) எண்.289, நெடுஞ்சாலை (ம) சிறுதுறைமுகங்கள் (எச்.என்.1) துறை நாள் 4.12.2008.
4. அரசாணை (நிலை) எண்.185, நெடுஞ்சாலை (ம) சிறுதுறைமுகங்கள் (எச்.கே.3) துறை நாள் 24.05.2010.
5. அரசு கடித எண்.9803/எச்.கே.3/2010–1, நாள் 6.07.2010.
6. முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை, கடித எண்.22081/ ஒப்பந்தம் 1/2010, நாள் 23.07.2010.

மேலே பார்வை 6-ஆவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை அவர்களை மேலே பார்வை 1 முதல் 3 வரையிலான அரசாணைகளின்படி ஏற்படுத்தப்பட்ட தொழில்நுட்பக் குழுக்களான ஒப்பந்தப்புள்ளி ஆணையத்தின் (COT) உறுப்பினர் மற்றும் ஆணையர், பொறியாளர்கள் குழுமத்தின் (BOE) தலைவர், விலைப்புள்ளி ஆணையத்தில் (SSR) ஒரு உறுப்பினர் மற்றும் திருத்திய நிர்வாக ஒப்புதல் குழுவின் (Committee on RAS) உறுப்பினராக நியமனம் செய்யவும் ஒப்பந்தப்புள்ளிக்கு பொறுப்புள்ள தலைமைப் பொறியாளர்களே ஒப்பந்தப்புள்ளி ஆணையத்திற்கு நிகழ்ச்சி நிரல் தயார் செய்து ஒப்பந்தப்புள்ளி ஆணையத்திற்கு அனுப்பவும் முதன்மை இயக்குநர் ஒப்பந்தப்புள்ளி ஆணையராகவும் முதன்மை இயக்குநர் அலுவலகம் ஒப்பந்தப்புள்ளி ஆணையமாக செயல்படவும் அனுமதி வழங்குமாறு முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை அவர்களின் கருத்துருவினை அரசு கவனமாக ஆய்வு செய்து அதனை ஏற்றுக் கொள்ள முடிவு செய்து அங்ஙனமே முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை தொழில் நுட்பக் குழுக்களுக்கான ஒப்பந்தப்புள்ளி ஆணையத்தின் (Commissionerate of Tenders) உறுப்பினர் (ம) ஆணையர், பொறியாளர்கள் குழுமத்தின் (Board of Engineers) தலைவர், விலைப்புள்ளி ஆணையத்தின் (Standard Schedule of Rates) உறுப்பினர் மற்றும் திருத்திய நிர்வாக ஒப்புதல் குழுவின் (Committee on Revised Administrative Sanction) உறுப்பினராக செயல்பட அனுமதித்து அரசு ஆணையிடுகிறது.

3. மேலும் ஒப்பந்தப்புள்ளிகளுக்கு பொறுப்புள்ள தலைமைப் பொறியாளர்களே ஒப்பந்தப்புள்ளி ஆணையத்தின் பரிசீலனைக்கு நிகழ்ச்சி நிரல் தயார் செய்து ஒப்பந்தப்புள்ளி

ஆணையத்திற்கு அனுப்ப வேண்டும் என்றும் முதன்மை இயக்குநர் ஒப்பந்தப்புள்ளி ஆணையராகவும், முதன்மை இயக்குநர் அலுவலகம் ஒப்பந்தப்புள்ளி ஆணையமாகவும் செயல்படும் என்று அரசு ஆணையிடுகிறது.

3. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண்.68760/பொ.பா.1/2010, நாள் 2.12.2010–ன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கோ.சந்தானம்,
அரசு செயலாளர்.

பெறுநர்

முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை, சென்னை–5.
தலைமைப் பொறியாளர் (க(ம)ப), நெடுஞ்சாலைத் துறை, சென்னை–5
இதர தலைமைப் பொறியாளர்கள், நெடுஞ்சாலைத் துறை, சென்னை.
முதன்மை செயலர், நிதித்துறை, சென்னை–9.
சார்புச் செயலர் (எம்.கே.) நிதித்துறை, சென்னை–9.
செயலரின் தனிச் செயலர், நெடுஞ்சாலை (ம) சிறு துறைமுகங்கள் துறை, சென்னை–9
துணைச் செயலர்/கூடுதல் செயலர், நெடுஞ்சாலை (ம) சிறு துறைமுகங்கள் துறை சென்னை–9

நகல்

மாண்புமிகு முதலமைச்சரின் சிறப்புச் செயலர், சென்னை–9
மாண்புமிகு நிதியமைச்சரின் செயலர், சென்னை–9
மாண்புமிகு அமைச்சர், நெடுஞ்சாலை (ம) சிறு துறைமுகங்கள் துறை அவர்களின் நேர்முக உதவியாளர் சென்னை–9
நிதி (பொ.ப.1) துறை, சென்னை–9
நெடுஞ்சாலை (ம) சிறு துறைமுகங்கள் துறையின் அனைத்துப் பிரிவுகள், சென்னை–9
இ.கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.